13.11.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.150 /2021 ) திரு.சுந்தரராஜ்

1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதி எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு எனது பெயருக்கு பொதுஅதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எனது தகப்பனாரின் தாத்தா சங்கரப்ப நாயக்கரின் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 வாதியின் தாத்தாவின் தாத்தா கிரையம் பெற்ற ஆவணம் எழுதிக்கொடுத்தாக சொல்லுவதற்கு அவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டதாக ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் பூர்வீகச்சொத்து. எனது தந்தை சங்கரப்ப நாயக்கருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் 5 பெண்கள், கணபதியம்மாள், ஆவடைத்தாயம்மாள், ராஜலட்சுமி, சுந்ததரராஜ் ஆகிய நான் சரஸ்வதி,இந்திராணி ஆகியோர்கள் வாரிசுகள். அவர்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிராது 2 வது தபசிலாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே காலி சந்து 3 1/2 அடி உள்ளது என்றால் ஒரு பக்கம் 3 ½ அடியும் மற்றொரு பக்கம் 3 3/4 அடியும் உள்ளது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
13.11.2025.